# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.882/F/2024 (SA.12445/F/2024)

திரு S. பாஸ்கர் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு,
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004. — பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 18.06.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 18.07.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.08.2024 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 22.08.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 19.09.2024 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 13.11.2024 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 10.12.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு S. பாஸ்கர் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு மு. முத்துகுமரன், கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை க(ம)ப, சேலம் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்டம், கோட்டப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு 1, சேலம் அவர்களின் 289/2024/உ/நாள் 15.05.2024, 290/2024/உ/நாள் 15.05.2024, 292/2024/உ/நாள் 15.05.2024 ஆகிய ஆவணங்களின் நகல்கள், சேலம் நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்திற்குட்பட்ட வேம்படிதாளம் குறுவட்டம் நைனம்பட்டி கிராமம் (புல எண்.33-க்கு அருகில்) ஆட்டையாம்பட்டியிலிருந்து சேலம் செல்லும் சாலையின் ஓரத்தில் வலது புறமாக இருந்த சுமார் 50 வயதுடைய பலன்தரும் நெடுஞ்சாலைத் துறையினரால் வெட்டப்பட்ட (மரம் எண்.2) மேற்படி உயிருள்ள புளிய மரம் (பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கோட்டப்பொறியாளர் அளித்த புகைப்பட தகவலின்படி) மேற்படி செழுமையாக வளர்ந்திருந்த புளிய மரமானது பட்டுப்போனது என உறுதி செய்த உதவி கோட்டப்பொறியாளர் அவர்களின் சான்றிட்ட அறிக்கையின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 16 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.12445/F/2024) 13.11.2024 அன்று காணொளி காட்சி வாயிலாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***" 4. அன்றைய (11.09.2024) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்கள் குறித்து இனம் வாரியான தகவல்களை முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாக தயாரித்து இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது".***

5. இந்நிலையில், இவ்வாணையத்தால் 13.11.2024 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 10.12.2024 தேதியிட்டு இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (09.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

7. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்களை அவருக்கு முழுமையாக வழங்குவதற்கு சிறிது கால அவகாசம் வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். ஆணையம் அதனை பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக **'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது'** என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.882 /F/2024 (SA.12445/F/2024)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு,
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004.

**<u>வழக்கு எண்.NC.882 /F/2024 (SA.12445/F/2024)</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S. பாஸ்கர், த/பெ. சண்முகம்,
எண்.32, மாரி வீதி,
ஆட்டையாம்பட்டி (அஞ்சல்),
சேலம் - 637 501.

Copy to: File.
SNPS / 11.04.2025